தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கிழமை இதழ்)

தொகுதி-3] திருவள்ளுவர் ஆண்டு 2016 துலை 4 (20-10-1985) 65 காசுகள் [இதழ் எண்: 65] [பகுதி 36-38

உலக ஒன்றியப் பேரவை (U.N.O.) உறங்குகிறதா? அல்லது ஊமையாகிவிட்டதா?

வெறும் தீர்மானங்களே அதற்குப் போதுமா? நடவடிக்கை தேவையில்லையா?

உறுப்பு நாடுகளில் நடைபெறும் மக்களினக் கொடுமைகளைக் கட்டுப்படுத்தும் அல்லது தடுத்து நிறுத்தும் முயற்சிகளை ஏன் அது செய்யவில்லை?

உ.ஒ.பே. (U.N.O-ஐ.நா.) எதற்கு? அதைக் கலைத்துவிடலாமே!

கொடுமை உலகமே! இலங்கையில் நடக்கும் தமிழினப் படுகொலையைப் பார்த்தும் நீ ஏன் கண்களை இறுக்கிக் கொண்டாய்?

உலக ஒன்றியப் பேரவையின் சட்ட திட்டங்களைப் பாரீர்!

மாந்தக் கொடுமைகள் ஒரு நாட்டின் உள்நாட்டு நிகழ்ச்சி ஆகாது.

(1) ஒரு நாட்டின் உள்முகச் செயல்களில் மற்றொரு நாடு தலையிடக் கூடாது,

[உ. ஒ. பே. (ஐ.நா.) அமைப்பியல் ஆவணம்: எண். 2 (7)]

(2) எனினும் மக்கள் உரிமைகளும், கண்ணியமும் கொடுமைகளுக்கு உள்ளாகின்ற சூழ்நிலைகளில், இந்தத் தடையை மீறி, ஒரு நாடு வேறொரு நாட்டின் உள்முக செயற்பாடுகளில் தலையிட்டுச் செயற்படலாம்.

[உ. ஒ. பே. (ஐ.நா.) — நெறிமுறை எண். 1 (3)]

இனப் படுகொலை குற்றவியல் (Criminal) குற்றம்!

எந்த அரசும் சொந்த நாட்டிற்குள்ளேயே கூட, தன் நாட்டுக் குடிமக்கள் மீது இனப் படுகொலை புரிந்தால், அது அனைத்துலகக் கவலைக்குரிய சிக்கல் ஆகும்; அனைத்துலகச் சட்டப்படி அது குற்றவியல் (Criminal) குற்றமாகும். அது உ. ஒ. பே. (ஐ.நா. மன்றம்) தடுத்துநிறுத்த வேண்டிய குற்றமாகும்.

—1948 - உ. ஒ. பே. தீர்மானம்.

If a Government Pertetrates genocide even with In its own territory against its own citizens, it is a matter of International concern. It is a crime under International law which the UNITED NATIONS Comprevent.

- 1948. U.N.O. Resolution.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

தொடர்—17

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு!

4. பாரிசு நிகழ்ச்சிகள் (தொடர்ச்சி)

இனி, ஒழுக்க விளக்கம் கூறி மடல் எழுதிய புலவர், சிவசங்கு அவர்களின் இரண்டாம் பத்திக் கருத்தைப் பார்ப்போம்.

"செவிலிக்கு எதிரே வருபவர் தலைவனும், தலைவியும். தன் மகளும், அவள் காதலனும் ஆகிய இருவரில், தலைவன் தலைவனை நன்றாய்க் கவனித்தான். அவளைக் கவனித்துப் பார்த்து ஆகவேண்டுவது ஒன்றுமில்லை; அதனாலும், நாம் ஏன் அவளைப் பார்க்கவேண்டும், என்ற எண்ணத்தாலும் அவளை அவன் கூர்ந்து பார்க்கவில்லை. தன்னோடு வந்த தலைவி, அவளை நன்கு கவனித்தும், அவளொடு வரும் பிறனைப் பார்த்து என்ன ஆகவேண்டி இருக்கிறது என்ற எண்ணத்தாலும், நம்மைப் போல் நம் தலைவியும் அவளை நன்கு கவனித்துப் பார்த்திருப்பாள் என்று நினைத்து, அவன் அவ்வாறு கேட்டான் என்று பொருள் கொண்டால் தவறு ஏற்படாது." என்பது அந்தப் பத்தி.

இம்மடற் பகுதியில் கூறப்பெறும் முகாமையான கருத்து, 'திருமணம் ஆன ஒரு பெண்ணை, இன்னோர் ஆண் பார்க்க வேண்டியதில்லை என்பதும், அதேபோல் திருமணம் ஆன ஆணையோ அல்லது வேறு ஆணை (அவன் திருமணம் ஆகாதவனாக இருந்தாலும்), திருமணமான ஒரு பெண் பார்க்க வேண்டுவதில்லை என்பதும், அவ்வாறு ஒருவரை ஒருவர் பார்ப்பது தவறு; அல்லது குற்றம், அல்லது கரிசு (பாவம்) என்பதும் பொதுவாகக் கூறப்படும் ஒரு பண்பாடாகச் சுட்டப் பெற்றுள்ளது.

இங்கு நாம் நன்கு கவனிக்க வேண்டுவது பார்ப்பது. பார்ப்பது என்பது தமிழ் மொழியில் கூறப்பெறும் சொற்பொருள் அடிப்படையில் மனம், அறிவு இரண்டு உணர்வுகளும் தொடர்பற்றமுறையில், கண்ணுக்கு இயல்பான காட்சியனவாக வெறும் பார்வையை மட்டுமே குறிப்பதாகக் கூறலாம்.

பார்த்தல், காணுதல், நோக்குதல் என்னும் மூன்று காட்சிக் கவனிப்புச் சொற்கள் தமிழில் உண்டு. இம் மூன்று சொற்களையும், மூன்று நிலைகளில் தமிழில் அறிஞர்கள் குறிப்பது மரபு. வேறு சில உலக மொழிகளிலும் இம்மரபு உண்டு. தமிழில் உள்ள இம்மரபு இக் காலத்தில் மொழி நிலையில் அறிஞர்களிடத்திலும், பிற எத்தனையோ, மரபுகளைப்போல் கவனிக்கப் பெறுவதில்லை. ஆனால் தமிழ்மொழி மிகச் செழித்திருந்த முதலிரண்டு கழகக் காலங்களில், இம்மரபு, இலக்கண நடைமுறையைப் போலவே கவனிக்கப் பெற்று வந்துள்ளதை, மடல் எழுதியவரைப் போலவே, நல்லறிஞர் பலரும் உணர்வர். இப்பொழுது, இம் மூன்று சொற்களையும், பொருள் வேறுபாட்டு நிலையில், ஆய்வடிப்படையில் சிறிது விளக்குவோம்,

பார்த்தல் என்பது கட்பொறியால் தெரிந்து [கொள்ளுதல்

காணுதல் என்பது கட்புலனால் அறிதல்.

நோக்குதல் என்பது கண்வழி உளஉணர்வால் பார்த்து உணர்தல்—உள் நோக்கத்துடன் பார்த்து உணர்தல்.

ஆங்கிலமொழியொடு பொருத்தி இச்சொற்களை விளக்குவதானால்,

பார்வை - பார் - பார்த்தல் — Seeing, looking — (வெறும் பார்வை - mere Vision.

காட்சி - கண் — காணுதல் — Observation, [Perseption.

அறிவிப்புலனால் அறிதல்—Observation with [sensation.

நோக்கம் —நோக்கு— நோக்குதல்—gazing-looking with motive, looking with Object,-looking with Purpose.

ஓர் உள் நோக்கத்தோடு மனம் பொருந்தப் பார்த்து உணர்தல்.

இந்த நிலையில், நாம் எதைப் பண்பாடு என்றும், பொது ஒழுக்கம் என்று சொல்கிறோம்? திருமணமான பெண் அல்லது ஆண், வேறோர் ஆணையோ அல்லது பெண்ணையோ, பார்க்கவே கூடாது என்பதையா? வேண்டுமானால் அவளையோ, அவனையோ நோக்கக்கூடாது என்றும் சொல்லலாம். ஏனெனில் அது பொது ஒழுங்குக்கு அல்லது உயிரமைதிக்கு இடையூறாகவும், கேடு பயப்பதாகவும் ஆகும் என்பதால். இந்த நிலையைத்தாம் தமிழர்கள் கழகக் காலத்திலேயே உணர்ந்திருந்தனர்.

நோக்குதல் என்பது தலைவனும், தலைவியும் தங்களுக்குள் பார்த்துக் கொள்வது: பிறரைப் பார்க்கக் கூடாதது.

இந் நிலை காதலர்களாக உள்ளவர்களிடத்தும் சரி; கணவன் மனைவியாக உள்ளவர்களிடத்தும் சரி. இரு நிலையிலும் நோக்கு தவறன்று.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து. (1082

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. (1085)

இது, காதலர் நிலை. அஃதாவது களவு நிலை.

தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள்செய் தது. (1279)

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று. (1320)

இது, கணவன் மனைவியர் நிலை. அஃதாவது கற்பு நிலை.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. (148)

- இது, ஒருவன் திருமணம் ஆன பிறன் மனைவியிடம் காட்டக்கூடாத, தடுக்கப்பட்ட நிலை. அஃதாவது பொது வொழுக்க நிலை.

மேற்காட்டிய இந்த மூன்று திருக்குறள் பாடல் நிலைகளிலும், பார்வை மனவுணர்வுடன் பொருந்தியிருக்கின்றது. ஆனால் மூன்றும் நிலையில் அது தவறு அல்லது குற்றம் என்று குமுகாயத்திற்கு உணர்த்தப்பட்டது. பிறன் மனைவியைப் பார்க்கலாம்; ஆனால், நோக்கக்கூடாது. நோக்கினால், அது பொதுவான வாழ்வியல் அமைதிக்கு ஊறு பயக்கும் என்பதால், அது தடுக்கப்பட்டது.

இனி, முன்னர் எடுத்துக் காட்டிய இரண்டு பாடல்களில், மணிவாசகரின் பாட்டில் காணுதல் என்றும், வேதநாயகரின் பாட்டில் பார்த்தல் என்றும் சொற்கள் ஆளப்பெற்றுள்ளன. கழகக் காலத்தில், நோக்கு என்று பொருள் பொதிவுடன் இருந்த-தடுக்கப்பெற்ற உணர்வு இடைக்காலத்தில் 'காணுதல்' என்று இறுகிப் பிற்காலத்தில், பார்வை என்று மேலும் இறுகியதை ஆய்ந்து உணர்க.

ஆனால், ஒருவன் பிறன் மனைவியையோ, மணமான ஒருத்தி பிறன் கணவனையோ அல்லது வேறு ஒருவனையோ, பார்ப்பதே குற்றம் என்பது, மிகையான கோட்பாடாகும். இங்குதான் அடிமை நிலை புலப்படுத்தப்படுகிறது. ஒழுக்கம் அன்று. அடக்கம் ஒழுக்கமாகலாம். ஆனால், மீறிய அடக்கவுணர்வு அடிமை நிலையையே காட்டும். அஃது ஒழுக்கமாகாது. ஒடுக்கப்படுவது.

எனவேதான், மணிவாசகர் காட்டும் தலைவன்-தலைவியர் மீறிய ஒழுக்கம் என்று, மனத்தை மிகு கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி, அடிமை உணர்வை வளர்த்துக் கொள்கின்றனர். மேலும், இப்படிப்பட்ட மனவுணர்வு கணவன்-மனைவி இருவருக்குமே வாய்த்தல் அரிது. ஒருவேளை அவ்வாறு இருவருக்குமே வாயாமல், கணவனுக்கு மட்டுமோ, அல்லது மனைவிக்கு மட்டுமோ வாய்த்து, மற்றவர்க்கு வாயாமலிருக்குமானால், அவர்களின் மணவுறவு சிறப்பதற்கு அல்லது இருவரையும் மகிழ்விப்பதற்கு மாறாக, இருவரையும் மீளாத வாழ்வியல் துன்பத்திற்கு ஆளாக்கிவிடும். இம் மனவுணர்வுக் கோட்டத்தின் விளைவை நன்கு ஆழ்ந்து எண்ணிப்பார்த்தே தெளிதல் வேண்டும்.

தன் மனைவி வேறோர் ஆணைப் பார்க்கக்கூடாது என்னும் மன உணர்வே, பார்க்கமாட்டாள் என்னும் நம்பிக்கையை-மனவுணர்வை அவனுக்கு உண்டாக்குதல் வேண்டும். அதேபோல், தன் கணவன் வேறொரு பெண்ணைப் பார்க்கக்கூடாது என்னும் மனவுணர்வே, பார்க்கமாட்டார் என்னும் மனவுணர்வை-நம்பிக்கையை அவளுக்கு உண்டாக்குதல் வேண்டும். இப்படி, ஒருவர்மேல் மற்றவர் கொள்ளும் கட்டுப்பாட்டு உணர்வு அல்லது எதிர்பார்க்கும் நம்பிக்கை உணர்வு சிதையுமாறு ஒரு நிகழ்ச்சியோ, நேர்ச்சியோ நிகழுமானால், அவர்கள் வாழ்க்கையில் என்ன நேரும் என்பதை மன அறிவியலுணர்வுடையார் எண்ணிப் பார்க்கவும். இது போன்ற மனவுணர்வுதான் கணவன்-மனைவியரிடம் பூசலை விளைவித்து மன வேறுபாடுகளை வளர்க்கிறது. இப் பூசலே இலக்கியத்தில் ஊடல் என்னும் சுவையுணர்வாகப் பேசப் பெற்றாலும், வாழ்வியலில் எத்துணையளவு இடர்ப்பாடுகளை விளைவித்து மன வேறுபாடுகளை வளர்க்கின்றது என்பதைக் குடும்பவியலை நுணுகி ஆய்ந்தவர்கள் அறிவர். இலக்கியத்தில் இவ்வுணர்வு திருவள்ளுவரின் தலைவன்-தலைவியரைப் போல் உள்ள அறிவுள்ளவர்களிடம் காட்டப் பெற்றாலும், வாழ்க்கையில் இது பலதரப்பட்ட மக்களிடையே தோன்றி, எத்துணையளவு துன்பத்தை விளைவித்து விடுகிறது!

மேலும், தன் மனைவி வேறு ஓர் ஆணைப் பார்க்கவும் கூடாது! வேறு ஓர் ஆணால் பார்க்கப் படவும் கூடாது என்னும் ஆணுளுமை உணர்வே வளர்ந்து, இசுலாம் போன்ற மதக் கோட்பாடுகளில், பெண்களை மூடு திரை போட்டு மூடவும், வெளியே நடமாடுவதற்கே தடையிடவும் ஆன வல்லாளுமை நிலைக்கு வழி வகுக்கும்படி வடிவம் எய்தியது. இப்படிப்பட்ட மனவுணர்வு தமிழினத்தில் அந்த அளவுக்கு வளர்ந்திருக்க வில்லையாயினும், கழகக் காலத்திலேயே கூட அத்தகைய கோட்பாடுகளும் இருந்திருப்பதற்கான சான்றுகள் திருக்குறளிலேயே காணப்படுகின்றன.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. (57)

என்னும் குறள் பெண் சிறை வைத்துக் காக்கப்பட்ட நிலையினையும்,

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. (994)

என்னும் குறள் ஆண், குமுகாயத்தில் ஒழுக்கமற்றுத் திரிந்த ஆணுளுமை நிலையினையும் கட்டியம் கூறித் தெரிவிக்கவில்லையா?

ஓர் ஆணோ-பெண்ணோ தன் பொருட்டுத் தன் திருமணத் துணைவர் இப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பதும், அவ்வாறில்லாவிடத்து ஏமாறுவதும், அதனால் குழப்பங்கள் விளைவதும் நல்ல பண்பாட்டின் நடைமுறைகள் ஆகிவிட முடியாது. இயல்பாகவே அவரவர், அவரவர் அளவில் தம் தம் நடைமுறையைக் குமுகாயப் பொது நிலைக்கும் அமைவுக்கும் ஏற்ற வகையிலும் உயிரியல் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் மாறுபாடற்ற வகையிலும் நடந்துகொள்வதே சிறந்த பண்பாடு ஆகும்.

இனி, ஒரு பெண்ணை ஆணோ, ஓர் ஆணைப் பெண்ணோ தவறாகத்தான் பார்க்கிறார், அல்லது சரியாகத்தான் பார்க்கிறார் என்பதை யாருமே எடையிட்டுவிட முடியாது. அவ்வாறுப் பார்ப்பதை பார்ப்பவரோ, அல்லது பார்க்கப் படுபவரோ தம் தம் நிலையில் தடுத்துக் கொண்டாலன்றிப் பிறர் யாரும் தடுத்துவிடவும் முடியாது. இனி, இந்த மன நிலையில் எல்லாரும் சரியாகத்தான் இயங்குவார்கள் என்று சொல்லவும் முடியாது;

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். (282)

என்னும் திருக்குறளில் தீமையை உள்ளத்தால் உள்ளுவதும், கள்ளத்தால் கள்வேம் என்பதும் பிறர் காண்பதற்குஇயலாதமனவுணர்வுகளாகத்தான் இருப்பதால்; அறவுணர்வால் இதைத் தடுக்கவேண்டும் என்று அறம் கூறப்பெறுகிறது. இதுவும் கூட கூறுவதாலேயே வெற்றிபெற்று விடாது. நடைமுறைதான் எல்லாவற்றுக்கும் வெளிப்படையானது. தண்டனை இல்லாமற்போனாலும், வாய்ப்புக் கிடைத்தாலும் பெரும்பகுதி மக்கள் தவறு செய்பவர்களாகவே இருக்கும் ஒரு குமுகாயத்தில், நல்லியல்புக் கோட்பாடுகள் எத்தனைக் காலத்திற்குச் சொல்லப்பெற்றாலும், எத்தனைப்பேர் சொன்னாலும், பண்பாடு தோன்றிவிடாது. எனவே, மாந்த இயல்புக்கு மாறான கருதுதல் கோட்பாடுகள், மக்கள் பொதுவுணர்வு பெறுதவரை, என்றுமே நடைமுறைகளாகி விட முடியாது.

எனவே, ஓர் ஆணை பெண்ணும்; ஒரு பெண்ணை ஆணும் அவர்கள் திருமணம் ஆனவர்களாக இருப்பினும், இல்லாதவர்களாக இருப்பினும், பார்த்துக் கொள்ளவும் கூடாது என்பதைப் பண்பாடாக ஆக்கி விட முயலக்கூடாது. அப்படி எவரேனும் இருப்பாரானாலும் அவரைச் சிலர் பாராட்டினாலும், அவரைய அனைவர்க்கும் எடுத்துக்காட்டாகச் சொல்வதும், அவர்போல் இல்லாதவரை இழித்துப் பேசுவதும், குமுகாய நடைமுறையென்று உறுதிப் படுத்திவிடவும் முடியாது. வருகின்ற நன்மை தீமைகளுக்கு ஏற்பவும், பொதுநல உணர்வுகளுக்குப் பொருந்தவும் அவரை அவரே நெறிப்படுத்திக் கொள்ளும் மனவுணர்வே இயற்கையான உயர்ந்த கோட்பாடாகும். ஆனால், அதுவும் இடத்தாலும், இனத்தாலும், காலத்தாலும், பருவத்தாலும், ஆளுக்கு ஆளும் வேறுபடலாம்; ஆகையால், அதுவே இதுவென்று முத்திரையிட்டு விடவும் முடியாது என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, பார்ப்பதாலேயே மனம் கெட்டுவிடும் என்பதும் சரியன்று: உள்நோக்கமற்ற பொதுப் பார்வையே தவறென்றால் இவ்வுலகில் எப்படி இயங்கமுடியும்? அப்படிப்பட்டவர் காடுகளிலே தான் வாழவேண்டும்.

முன் காட்டப்பெற்ற காட்சியில், எதிர்ப்படுபவர் ஓர் ஆணோ அல்லது பெண்ணோ மட்டும் இருந்தால் என்ன செய்வது? செவிலி கேட்பதற்கு, ஓர் ஆண் மட்டுந்தான் போனான் என்று ஆணோ, அல்லது ஒரு பெண் மட்டுந்தான் போனாள் என்று பெண்ணோ சொல்லவேண்டியிருக்குமே! இஃது என்ன அறிவுக் குழப்பம். இதைச் சரியென்றோ, அல்லது இதுதான் சரியான பண்பாடென்றோ, அல்லது அப்பொழுதுதான் தலைவன் - தலைவியர் தம்முள் கொண்ட உயர்ந்த அன்பு புலப்படுமென்றோ சொல்லமுடியுமா? உயிரியல்; அழகியல், வாழ்வியல் நடைமுறைக்குப் பொருந்தாத கற்பனையைக் கூறி, இதுதான் பண்பாடு என்றால், இந்த மனக் கோளாறை யார் தீர்ப்பது? கற்பனை சுவையாக இருக்கலாம். ஆனால், கற்பனையெல்லாம் கற்பிப்பிற்குப் பொருந்தும் என்று கருதிவிடக் கூடாது. மணிவாசகரின் கற்பனைப்படி அப்படியொரு தலைவன்-தலைவி இருக்கலாம். கூடாது என்றோ; முடியாது என்றோ எவரும் சொல்லமுடியாது. ஆனால், அப்படித்தான் இருக்கவேண்டும் என்று எவராவது சொல்லமுடியுமா? இருந்தால் நல்லது; (அதுவும் அவர்களுக்கு.) இல்லாமற்போனால் தவறில்லை. ஆனால், இந்த மனக்கோளாறு எல்லாரிடமும் இருந்தால் உலகம் என்னாவது? நல்லவேளை, இப்படியான ஒரு மனநிலை எல்லாரிடமும் இல்லாதபடி தான் இயற்கை இருக்கிறது.

இனி, புலவரின் அடுத்த பத்திக்கு வருவோம்.

(தொடரும்)

தமிழன் முதலில் தன் விடுதலை பெறவேண்டும்!

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளுக்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 65 (20-10-1985) [பகுதி-36-38

பஞ்சாப் தேர்தல் முடிவுகள் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தவில்லை!

செப்டம்பர் மாத இறுதியில் பஞ்சாபில் நடந்த தேர்தல் முடிவுகள் அனைவரும், குறிப்பாக இந்திராப் பேராயக்கட்சியினரும், இராசீவ் காந்தியும் எதிர்பார்த்ததற்கு நேர் எதிரான முடிவுகளையே தந்திருக்கின்றன.

தேர்தலுக்கு முன், பஞ்சாபில் இந்திராக் கட்சியினர்தாம் ஆட்சிக்கு வருவார்கள் என்று, இராசீவ் காந்தி பன்னிப் பன்னிப் பலமுறை கூறிவந்தார். அவர் கட்சியின் பண வலிவையும், அதிகார அரப்பத் தனங்களையும் கொண்டே அவர் அப்படிக் கூறினார். ஆனால், இந்திராப் பேராயத்தார் மொத்தத்தில் நான்கில் ஒரு பங்கு இடங்களையே தேர்தலில் பெற முடிந்தது. அகாலி தளமோ ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கு இடத்தைக் கைப்பற்றி, இந்திராக் கட்சியை மண் கவ்வச் செய்திருக்கின்றது.

ஆனாலும், மிகவும் தந்திரக்காரரான இராசீவ் காந்தி தேர்தலுக்குப் பின்னும் அவர் கட்சியின் தோல்வியையும் வெற்றியாகவே மதிப்பிட்டுப் பேசியிருக்கின்றார். இந்திராக் கட்சிக்குக் கிடைத்த படுதோல்வியைப் பற்றி எதுவுமே கூறாமல், 'அகாலி தளத்தின் வெற்றி', 'இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுக்குக் கிடைத்த வெற்றி' என்று, 'கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்று நிலைமையைத் திரித்துப் பேசியிருக்கிறார். உண்மை விளங்காத பலரும், 'அகாலிதளம் பெற்ற வெற்றி, 'பிரிவினை, பிளவு பேசுபவர்களுக்குக் கிடைத்த வலியான அடியாகும் என்று, 'எவருக்கோ பிறந்த பிள்ளையைத் தங்களுக்குப் பிறந்த'தாகக் கருதிப் பேசியிருக்கின்றனர்.

இவ் வெற்றி பிரிவினை பேசுபவர்களுக்குக் கிடைத்த தோல்வி, அல்லது அடி என்பதும், இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் கிடைத்த வெற்றி என்று எக்களிப்பாகப் பேசுவதும், ஏமாற்றும், கரவும் நிறைந்த பொருளற்ற புன்மைப் பேச்சுகளாகும்.

தேர்தலில், 'தனி அகாலித்தான்' கொள்கையுடையவர்கள் ஈடுபடவே இல்லாதபொழுது, இம் முடிவு அவர்களுக்குக் கிடைத்த தோல்வி என்பது எப்படிச் சரியாகும் என்பது நமக்கு விளங்கவில்லை. அதேபோல், மிகவும் வெறித்தனமாகவும், அதிகாரப், பணப், அரசியல் தில்லுமுல்லுகள், அரப்பத்தனங்கள், சூழ்ச்சிகள் இவற்றையே முதலீடாக வைத்தும், அரசப் பரிவாரங்கள், கட்டுக் காவல்கள் முதலியவற்றையே துணையாகக் கொண்டும் வீரதீரமாக வெற்றி முழக்கமிட்ட இந்திராக் கட்சி படுதோல்வியடைந்ததும் எப்படி இந்தியத் தேசியத்திற்கோ, அல்லது ஒருமைப்பாட்டிற்கோ கிடைத்த வெற்றியாகும் என்பதும் நமக்குப் புலப்படவில்லை.

இஃது உண்மையிலேயே இந்தியத் தேசியத்திற்கோ, அல்லது ஒருமைப்பாட்டிற்கோ கிடைத்த வெற்றி என்று கருதப்பெற வேண்டுமானால், இந்திராக் கட்சி, இப்பொழுது அகாலி தளம் பெற்ற மிகப் பெரும்பான்மையான இடத்தைப் பெற்று வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால், நிலைமை நேர் எதிர்மாறாக இருந்தும், இராசீவ் காந்தியும் அவரைச் சேர்ந்த தில்லுமுல்லர்களும், இது தேசிய ஒருமைப்பாட்டுக்குக் கிடைத்த வெற்றி என்று பீற்றிக் கொள்வது வெட்கக் கேடானதும், வேடிக்கையானதுமாகும்! அதேபோல், தேர்தலிலேயே ஈடுபடாத, தேர்தலில் நம்பிக்கை வைக்காத ஒரு கொள்கையினர்க்குக் கிடைத்த தோல்வி என்பதும், பொதுமக்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் சொல்லப் பெற்றதும், உண்மையை மூடி மறைப்பதுமாகும்.

இனி, எல்லாவற்றுக்கும் மேலாக, அகாலிதளம் தேர்தலில் மிகப் பெரும்பான்மை வெற்றி பெற்றுத் தனித்து ஆட்சி நிறுவியிருப்பதும், கூட்டு அல்லது தோழமை அமைச்சரவை ஏற்படும் என்று எதிர்பார்த்த இந்திராக் கட்சிப் பதவி வெறியர்களின் முகத்தில் கரி பூசியிருப்பதும், சீக்கியத் தேசிய இனத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்பதை, இந்தியத் தேசிய எகத்தாள வெறியர்கள் ஒவ்வொருவரும் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும்.

இந்தியாவில், இனி, மொழித்தேசிய அல்லது இனத்தேசியக் கொள்கைக்கேயன்றி, இந்தியத் தேசியத்திற்கோ (அப்படி ஒரு

(மூன்றும் பத்தி பார்க்க)

இதழ் 64-இன் தொடர்ச்சி :

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள் -10

- கழக முதல்வர் -

அன்பர் ஒருவரின் மடல்! (இம் மடல் இக் கட்டுரையில் கூறப்பெறும் செய்திகளுக்குத் தொடர்புடையதாகையால் இங்கு வெளியிடப் பெறுகிறது).

அன்புள்ள பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம் பல. நான் தங்களுக்கு நிறைய எழுத வேண்டும் என்னும் ஆவலுடையவன். தாங்கள் ஒருமுறை (1974-இல்) மலேசியா நாட்டிற்கு வந்தபோது, சிரம்பான் பட்டணத்தில் இரண்டு நாட்கள் தங்களுடன் கலந்து உரையாடியும், தங்களுடைய நூல்களை வாங்கிப் படித்தும், அதன்பின் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, திங்களிதழ்களை வாங்கிப் படித்தும் வருபவன்.

அத்துடன் என்னுடைய அருமை நண்பர்கள், தமிழ்ப்பற்றாளர்கள் ஒன்று கூடும்பொழுது, தங்களைப் பற்றியும், தங்களுடைய தமிழ்த்தொண்டுபற்றியும், தங்களுடைய நூல்கள்பற்றியும், திங்கள் இதழ்கள் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, கிழமை இதழ் தமிழ் நிலம் இவை பற்றியும் எடுத்துரைப்பது என் வழக்கம்.

நான் கடந்த ஆண்டு (1984) சனவரித் திங்கள் தமிழகம் வந்தபோது, எப்படியாகிலும் தங்களை நேரில் கண்டு மனம் மகிழ உரையாட வேண்டும் என்ற எண்ணத்தோடு என்னுடைய நிகழ்ச்சிகளில் ஒன்றாக நேரத்தை ஒதுக்கி என்னுடைய இளவலின் மகன் உலக நாதனையும் கூட்டிக்கொண்டு தங்களுடைய இல்லம் வந்தேன். அன்று என் ஆசைப்படியே தங்களை நேரில் கண்டு பேசியதுடன், நம் தமிழர்கள் நிலையையும், தமிழ்நாட்டின் நிலைகளையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அன்று முதல் தமிழ்நிலம் தென்மொழி, தமிழ்ச்சிட்டு யாவும் தொடர்ந்து வந்து கொண்டுள்ளன.

'தமிழ்நிலத்'தில், 'நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்' என்று தொடர் கட்டுரையாக எழுதித் தங்களுடைய உள்ளக் கிடக்கையையும் நடந்தவற்றையும் எழுதி வருகிறீர்கள். அவ்வளவும் நூற்றுக்கு நூறு உண்மை என்பது நானறிந்தவரை உண்மை.

ஓர் எடுத்துக்காட்டு: தங்களைச் சிரம்பான் பெருமகர் (பிரமுகர்) ஒருவர் சுல்தானிடம் (அந்த மாநில அரசரிடம்) நேர்முகவுரைக்கு (பேட்டிக்கு)ம் அரச விருந்துக்கும் ஏற்பாடு செய்தார். அதுவும் எனக்குத் தெரியும். அப்பொழுது நீங்கள், 'அந்த மாதிரியான விருந்தும் வேண்டாம்; அம்மாதிரி நேர்முக உரையாடலும் வேண்டாம்' என்று மறுத்துக் கூறிவிட்டு, எங்களிடம் 'உங்களைப்போன்றவர்களின் ஆதரவு இருந்தால், அதுவே போதுமென்று' கூறிவிட்டதையும் நானறிவேன். ஆகவே அம்மாதிரியான நிலைகளை என் போன்றவர்கள் எழுதட்டும். அதுவே நன்று......

இன்னொரு முகாமையான இனிப்பான செய்தி. என் மூலமாக சேலம், செ. புதுப்பாளையத்தில் தங்களின் தூய தமிழ் பரவல்தொடங்கிவிட்டதாம். இங்கு மலேசியாவில் என்னுடைய சிறு விளக்கத்தால், என் அருமை நண்பர், இல. சதாசிவம், வணி.இ. (மதி) கிள்ளான் நகரத்திலிருப்பவர் நாற்பது உறுப்பினர்களைச் சேர்த்துத் 'தமிழ்ச்சிட்டு', 'தென்மொழி'க்கு ஆண்டு உறுப்பினராக்கியுள்ளார். கூடிய விரைவில் தொகை அனுப்புவதாக என்னிடம் கூறினார். தங்களின் அன்பான,

-செங்கோட்டை நல்லையா செலங்கூர், மலேசியா.

57: இம் மடல், முன் பத்திகளில் நம் குறிப்பிட்டு வந்த கருத்துகளுக்குத் துணையாக எழுதப்பெற்றது. எனவே, இதை இக் கட்டுரைத் தொடருக்கிடையில் வெளியிடவேண்டி வந்தது. அன்பர்கள் பொறுத்தருள்க.

58: இனி, தூய தமிழ் வளர்ச்சியில் அக்கறை காட்டாத இங்குள்ள இயக்கங்களுக்கிடையில்தான், நாம் இவ் வியக்கத்தைத் தொடங்கவேண்டிய தேவை ஏற்பட்டது என்பது முன்னுள்ள பத்திகளில் கூறப்பெற்ற கருத்துகளால் நன்கு விளங்கியிருக்கும்.

59: இனி, நம் கழகத்தின் அடுத்த கொள்கையைக் கவனியுங்கள். சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம். குமுகாய நிலையில், இதுவே நம் அழுத்தமான கொள்கை. சாதி வேறுபாடுகள் அறவே இருக்கக் கூடாது. அஃதாவது, நம் கழக நடைமுறைகள் யாவும் சாதி கூடாது என்னும் கொள்கைக்கு எந்த வகையிலும் மாறான திசையிலும் செல்லக்கூடாது. நாம் ஏதாவது ஒரு போராட்டத்தைத் தொடங்கினாலும், அல்லது ஒரு கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதானாலும், அல்லது சொன்னாலும், எழுதினாலும், அவை, சாதி இருக்க வேண்டும், அல்லது ஏதோ ஒரு கால எல்லை வரையிலாவது இருக்கவேண்டும், அல்லது ஏதோ சில நடைமுறைகளிலாகிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் நெகிழ்ச்சி நிலைக்கே இடம் கொடுக்கக்கூடாது. சாதி தவிர்க்கப்பட வேண்டும் என்று ஒரு கொள்கையை உண்மை என்று கொண்டுவிட்டால், அதை ஏற்பதற்குரிய காரணத்தை எந்தச் சூழ்நிலையிலும் எந்தக் கொள்கைக்குச் சார்பாகவும், சொல்லவோ, கடைப்பிடிக்கவோ கூடாது. இவ்வாறு இருந்தால், எத்தகைய வல்லவனாலும் சாதியை அகற்றிவிட முடியாது. அல்லது ஒழித்துவிட முடியாது. நம் நோக்கங்கள், பேச்சுகள், செயல்கள் அனைத்திலும் அந்தச் சாதியைப் புலப்படுத்தும், அல்லது ஏற்றுக்கொள்ளும், அல்லது உறுதிப்படுத்தும், ஏதானும் ஒரு கூறுகூட இருக்கவே கூடாது. அவ்வாறு இருந்தால் சாதி இருந்துகொண்டேதான் இருக்கும்; ஒழியவே ஒழியாது.

சாதி என்பது நமக்கு வெளியே இல்லை. மனவுணர்வாக நமக்கு உள்ளே தான் இருக்கிறது. உடலுணர்வாகவும், உயிருணர்வாகவும் அஃது உள்ளவரையில் அதை வெளியே எப்படி ஒழித்துவிட முடியும்,

மனத்தின் அமைமா தவரை
[இனத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று. (825)

என்னும் திருக்குறளில், மனவுணர்வாக ஒருணர்வை ஒருவன் கொண்டால்தவிர, சொல்லினாலோ, செயலினாலோ ஒருவனைத் தேறச்செய்து விட முடியாது என்னும் கருத்து வலிவாகப் பேசப் பெறுவதை உற்று நோக்கி உணர்க.

மற்றுந் தொடர்பா டெவன்கொல்
[பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை. (345)

என்னும் திருக்குறளில் பிறப்பறுக்கல் என்னும் சொல்லுக்குப் பகரமாக குலமறுக்கல் என்றும், உடம்பும் என்னும் சொல்லுக்குப் பகரமாக உரையும் என்றும் வைத்துப் படித்துப் பாருங்கள்.

மற்றுந் தொடர்ப்பாடு எவன்
[கொல் குலமறுக்கல்
உற்றார்க்கு உரையும் மிகை.

சாதியுணர்வும் ஒரு துறவு உணர்வுதான். இருப்பதைத் துறப்பது, துறந்துவிட்ட பின் அவ்வுணர்வு உள்ளத்தில், ஏன் எதற்காகத் தான் இருக்கவேண்டும்.

கட்குடியன் ஒருவன் கள் குடியை நாளை முதல் விட்டுவிடுவேன் என்பது போல், தீமை தவிர்ப்புக்கு அல்லது ஒழிப்புக்குக் காலம் வரையறுத்தல் என்பது எவ்வகையானும் பொருந்தாததே.

'ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க; இன்றும் இன்னே செய்க' என்றபடி, நன்மை செய்ய விரும்புவான் ஒருவன், அல்லது தீமையென்று கண்டதைத் தவிர்க்க விரும்புவான் ஒருவன், அந் நன்மையைச் செய்ய விரும்பினாலும், தீமையை ஒழிக்க விரும்பினாலும், அவன் அதை எப்பொழுது நன்மை என்று தெரிந்துகொண்டானோ அப்பொழுதிலிருந்தே அதைச் செய்ய வேண்டும்; அல்லது அதைத் தீமை என்று எப்பொழுது தெரிந்துகொண்டானோ, அப்பொழுதிலிருந்தே அதைத் தவிர்க்க வேண்டும். அதுதான் அதற்குச் சரியான காலம். இனி, அந்தக் காலத்தைத் தவிர்த்து, வேறு ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி, வேறு ஏதோ ஒரு காலத்தை அண்மையாகவோ, சேய்மையாகவோ வரையறுப்பானானால், அந்நிலையினின்று அவன் மீள விரும்பாமையையே அது காட்டும்.

சாதியொழிப்பைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் பலரும் இப்படித்தான் நடந்து கொள்கிறோம். 'எல்லாரும் செய்யும்பொழுது, நாமும் செய்துகொள்ளலாம்' என்பதைப்போல, ஒரு நெகிழ்ச்சி நிலை எதிலும் இல்லை; எங்கும் இல்லை; என்பதை உறுதியாக எண்ணிக் கொள்க.

—(தொடரும்)

(முதல் பத்தித் தொடர்ச்சி)

தேசியமே இல்லை. ஆனால், இருப்பது போல் கூறி ஏமாற்றப்படுகிறது. அப்படியிருப்பினும் அதற்கு) வெற்றி கிடைக்காது என்பது பஞ்சாப் தேர்தல் முடிவுகளாலும், அகாலிதள வெற்றியாலும் கிடைத்த தெள்ளத் தெளிவான கருத்தாகும் என்பதைத் தேசியம் பேசும் திருடர்கள் உணர்ந்துகொள்வார்களாக.

வாழ்க சீக்கியத் தேசிய உணர்வு!
வாழ்க அவர்களின் கொள்கை!!

எழுந்தால் அடங்காது இனவெழுச்சி!

தொடர் : 2. (சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழீழம் விடுதலை பெறுமா? வழியென்ன?

- மலர்மாறன் -

இலங்கையிலே தமிழ் மொழிக்குச் சம மதிப்புக் கொடுக்க மறுத்தபோது, ஈழத் தமிழர்கள் தனி நாடு கேட்கவில்லை - தமிழுக்குச் சம மதிப்புக் கேட்டு அறப் போராட்டம் நடத்தினர். அவர்களின் போராட்டத்தைச் சிங்கள அரசு அடக்கிவிட்டது.

மொழியில் சம வாய்ப்பை இழந்த ஈழத் தமிழர்கள் வேலை வாய்ப்புகளிலும் ஒதுக்கப்படத் தொடங்கினர். 25 விழுக்காட்டுப் பேர் உள்ள தமிழர்களுக்கு 5 விழுக்காட்டு வேலைகள் கூட கொடுக்கப்படவில்லை, கல்விக் கூடங்களில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படும் படியான சட்டங்கள் இயற்றினர்.

எல்லாத் துறைகளிலும் தமிழர்கள் சம வாய்ப்பை இழந்து அடிமை நிலைக்குத் துரத்தப்பட்டனர்.

அதன் பின்னர்தான் ஈழத் தமிழர்கள் தனி நாடு கேட்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கை 'குடியரசு நாடு' என்று கூறினதால் தான் 1948-இல் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ தமிழர்கள் உடன்பட்டனர்.

ஆனால், சிங்களவர்கள் குடியரசுப் பண்புகளைப் படுகுழியில் தள்ளிப் புதைத்து விட்டார்கள். சிறுபான்மையினராக உள்ள தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் இனத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர்.

குடியரசுப் பண்புகளை மறந்து, ஈழத் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்த, என்றைக்கு இலங்கை அரசு முற்பட்டதோ, அன்றைக்கே ஈழத்தமிழ் இனத்தை ஆளும் உரிமையை இலங்கை அரசு இழந்து விட்டது.

'குடியரசு நாடு' என்று கூறப்பட்டு இலங்கையைச் சுற்றி எல்லைக்கோடு போடப்பட்டது. குடியரசுப் பண்புகளை ஒழித்து ஈழத்தமிழ் சிறுபான்மை இனத்தை அழிக்கத் தொடங்கிய உடனேயே, இலங்கையைச் சுற்றியிருந்த எல்லைக்கோடு அழிந்து விட்டது. சிங்களவர்கள் பகுதி அளவிற்கு அது சுருங்கிவிட்டது. இலங்கை எல்லைக் கோட்டிற்கு வெளியே ஈழத்தமிழ் பகுதி வந்துவிட்டது.

அந்த அழிந்துபோன எல்லைக் கோட்டைக் காட்டி, ஈழத்தமிழ் இனத்தைக் காப்பாற்றச் செல்ல விரும்பும் தமிழ் மக்களைத் தடுத்து நிறுத்த, விரைவுச் சட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கும் தமிழக அரசின் செயல்கள், அறிவில்லாச் செயல்களாகும். அழிக்கப்பட்டுவிட்ட அந்த எல்லைக்கோட்டை மதிக்கவேண்டுமென்று வழக்காடிக் கொண்டிருப்பது மடமை ஆகும்.

அடிமைப் படுத்தப்படும் சிறுபான்மை இனம் பொங்கி எழும்; கொடுமைப் படுத்திக் கொண்டிருக்கும் ஆட்சிக்கு எதிராக போர்க்கொடியை உயர்த்தும்.

அவர்களுக்கே வலிமையிருந்தால், தாங்களே அந்தக் கொடுமைப் படுத்தும் நாட்டிலிருந்து பிரிந்து தங்களுக்கென்று தனி நாட்டை அமைத்துக் கொள்வார்கள் அல்லது தங்களது நட்பு நாடுகளின் துணைக் கொண்டு, தனது பகுதியைப் பிரித்துத் தனிநாட்டை அமைத்துக் கொள்வார்கள்.

இஃது உலகெங்கும் நடந்து கொண்டிருக்கும் பொதுவான நிகழ்ச்சியாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால், பிரிட்டனிலிருந்து ஐரிசு மக்கள் பிரிந்து, தங்களுக்கென்று தனி நாட்டை அமைத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சி இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஈழத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே 1948 ஆம் ஆண்டிலிருந்து அடிமைகளாக்கப்பட்டு உள்ளனர். அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுதலை பெறப் போராடுகின்றனர். அவர்கள் கேட்பது பிரிவினை அன்று; விடுதலையாகும்.

ஈழத்தமிழர்களுக்குத் துன்பம் ஏற்படும் போதெல்லாம், இந்தியத் தமிழர்கள் படையுடன் சென்று அவர்களின் துன்பங்களைத்துடைத் துள்ளனர். கரிகாற் சோழனும், குலோத்துங்க சோழனும் அந்தக் காலத்திலேயே உதவி செய்திருக்கின்றார்கள்.

அது போன்ற உதவியைத்தான் நாம் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்தியப் படையை அனுப்பவேண்டும் என்று கூறிவிட்டதால் நம் கடமைகள் தீர்ந்துவிடவில்லை. இந்தியப் படை அனுப்பப்படக்கூடிய வாய்ப்புக் கூறுகள் இல்லையென்றால், தமிழக அரசு தொண்டர் படையை அணியப்படுத்தி அனுப்பவேண்டும்.

மேற்கு வங்க அரசு எப்படி 'முக்திவாகினி' என்றபெயரில் தொண்டர் படையை அணியப்படுத்திக் கிழக்கு வங்கத்திற்குள் மறைமுகமாக அனுப்பி அங்குள்ள வங்காளிகளுக்கு உதவி செய்ததோ, அதே போன்று தொண்டர் படையை அமைக்கத் தமிழக அரசும் செயல்பட வேண்டும்.

கரிகாற் சோழன் சிங்கள மன்னனை வென்று ஆயிரக்கணக்கான சிங்களர்களை அடிமைகளாகச் சோழ நாட்டிற்குக் கொண்டு வந்தான். காவிரியின் மீது கல்லணை கட்டுவதற்கு அவர்களைப் பயன்படுத்தினான்.

அடிமையாக்கப்பட்ட சிங்களவர்களை அவன் படுகொலை செய்யவில்லை.

முன் காலத்தில் ஓர் இனத்தை இன்னோரினம் அடிமையாக ஆக்குவார்களே தவிர, அழிக்க முற்படமாட்டார்கள். ஆனால் இன்றோ நிலைமையே மாறிவிட்டதே.

இட்லர், யூத இனத்தையே அழித்துவிட எண்ணி, இலக்கக்கணக்கான யூதர்களைக் கொன்று குவித்தான்.

தங்களுக்கென்று இசுரேல் என்ற நாட்டை அமைப்பதற்காக யூதர்கள், இலக்கக்கணக்கான பாலத்தீனியர்களைக் கொன்று குவித்தும், ஏதிலிகளாக ஆக்கி நாட்டை விட்டே விரட்டியும் கொடுமை புரிந்துள்ளனர்.

அந்தப்பாதையில் சென்று ஈழத்தமிழ் இனத்தை அழித்து, செயவர்த்தனே என்ற காட்டு விலங்காண்டி தமிழ் மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார். நாடற்றவர்களாக அவர்களை ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்தமிழ் இன மக்களுக்குக் குமுக உரிமைகள் இல்லை என்று சட்டமியற்றி, அவர்களை அடிமைகளாக ஆக்கி உள்ளார்.

ஈழத் தமிழ் மக்களிடம் உள்ள சொத்துகளையெல்லாம் பிடுங்கிச் சிங்களவர்களிடம் கொடுத்து விடத் திட்டமிட்டுச் சட்டங்கள் இயற்றிக் கொண்டிருக்கின்றார் செயவர்த்தனா.

சொத்துகளை இழந்த ஈழத் தமிழர்கள், அடிமைகளாக இருந்து கூலிவேலை செய்துதான் பிழைக்க வேண்டும் என்ற கட்டாய நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார், செயவர்த்தனா.

தமிழனைக் கொன்று நாய்களைப்போல உசாவலின்றித் தூக்கி வீசி எறிந்து விட்டுச் செல்லச் சட்டம் இயற்றியுள்ளார், செயவர்த்தனா.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டே நாம் சும்மாதான் இருக்கவேண்டுமா? இவற்றை எதிர்த்துச்செயலில் இறங்குவதைத் தடுத்து நிறுத்த சட்டம் இயற்றிக் கொண்டிருக்கும் தமிழக அரசை நாம் ஆட்சியில் வைத்துக் கொண்டேதான் இருக்க வேண்டுமா?

ஈழத் தமிழர்கள் அடிமைகள் ஆக்கப்பட்டுக் கொடுமைப் படுத்தப்படுவதை, நாம் இயலாதவர்கள் போன்று பார்த்துக் கொண்டிருந்தால், நாளை நமக்கும் அந்த நிலைதான் ஏற்படும்.

அண்ணாவாலும், பெரியாராலும், ஏற்பட்ட விழிப்புணர்வு இருக்கும் இந்தக் காலத்திலேயே 20 தமிழ் அமைச்சர்கள் தமிழர்களுக்கு மாறான விசாவுச் சட்டத்தில், எதிர்த்துக் குரல் எழுப்பாது அடிமைகள் போன்று கையெழுத்துப் போட்டுள்ளார்கள் என்றால், அண்ணாவைப்பற்றித் தெரியாதவர்கள் தமிழகத்தில் பெரும்பான்மையாக வந்த பின்பு என்ன நிலை ஏற்படும்?

அண்ணாவால் உருவாக்கப்பட்ட அ. தி. மு. க. தொண்டர்களே சிந்தித்துச் செயல்படுங்கள்.

∴ ∴ ∴

"அமெரிக்கா இலங்கை அரசுக்கு ஆதரவாக இருக்கின்றது. ஆகவே, நாம் தமிழர்களைக் காப்பாற்ற இலங்கைக்குச் சென்றால் அமெரிக்கப் படை வரும்; அவர்கள் இலங்கைத் தமிழர்கள்மீது மாத்திரமன்று, தமிழகத்திலுள்ள நம்மீதும் குண்டு போட்டு நம்மையும் அழித்துவிடுவார்கள்."

-வெள்ளைக்காரனை எதிர்த்துப்போரிட்டு இந்தியாவிற்கு விடுதலை வாங்கியதாகக் கூறிக்கொள்ளும் கைந்நூல் (கதர்) சட்டைக்காரர்கள் இவ்வகையாகக் கூறித் தமிழக மக்களை குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தொடை நடுங்கிகளையும், அச்சங்கொள்ளிகளையும் பார்த்தா வெள்ளைக்காரன் ஆட்சி உரிமையைக் கொடுத்துவிட்டுப் போயிருப்பான்? இருக்கவே இருக்காது!

இந்த அடிமையுணர்வுப் பிறவிகளால் ஒருநாளும் இந்தியாவின் உரிமையை வாங்கியிருக்க முடியாது.

யாரோ போராடி நாட்டு உரிமையை வாங்கிக் கொடுத்திருப்பார்கள். இதுகளோ, தாங்கள் தாம் போராடிப் பெற்றதாகக் கூறிக் கொண்டிருக்கின்றன.

(தொடரும்.)

மூன்றும் உலக நாடுகளின் முரண்பாடான போக்குகள்

மூன்றும் உலகநாடுகள் யாவும் முரண்பாடுகளின் கிடங்குகளே. இந்த நாடுகளில் பொதுவாக விளங்குகிற பெரிய ஒரு சிக்கல் தேசியஇனச் சிக்கலாக இருக்கிறது. ஏனெனில், இம் மூன்றும் உலக நாடுகளில் பெரும்பான்மை நாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தேசியஇனங்கள் அடங்கிய பன்னாட்டின (Multinational) அரசுகளாக இருக்கின்றன. பன்னாட்டின் அரசு என்றால் என்ன? ஒரு பொது மொழியும், பொது வரலாறும், பொதுப் பண்பாடும், வரலாற்று வழியாக வந்த பொது நிலப்பரப்பும் இல்லாமல், ஒன்றுக்கு மேற்பட்ட தேசியஇனங்களை வலியப் பிடித்து அடக்கி, இறுக்கியும் நெருக்கியும் ஒரு குடியேற்றப் (காலனிய) பொருளியலாகவும் அவியல் அரசாகவும் கட்டிவைத்த உருப்படிகள்தாம் இந்தப் பன்னாட்டின் அரசுகள். இத்தகைய பன்னாட்டின் அரசுகள் யாவும் ஐரோப்பிய வந்தேறிகளால் தோற்றுவிக்கப்பட்டவை. இந்த வெள்ளை வந்தேறிகள் இந்த நாடுகளை விட்டு வெளியேற நேர்ந்த போது, ஒரு நாட்டின் மிகப்பெரும் தேசிய இனமாக இருந்த ஒரு தேசியஇனத்திடமோ, ஓரிரு தேசிய இனங்களிடமோ ஆட்சியை ஒப்படைத்துவிட்டு மூட்டைக் கட்டிக் கொண்டன.

இதனால், ஒவ்வொரு பன்னாட்டின் அரசுக்குள்ளும் ஓரிரண்டு ஆண்டைத் தேசியஇனங்கள் உண்டு. இந்த ஆண்டைத் தேசியஇனம் தன்னுடைய பொருளியல் சுரண்டலையும் அரசியல் கட்டுப்பாட்டையும், மொழித் திணிப்பையும், பண்பாட்டு வல்லாண்மையையும் வெறித்தனமாகக் கெட்டிப் படுத்திக் கொள்ளப்பார்க்கிறது. 'இலங்கை' தேசிய இனம் என்றோ 'இந்திய'த் தேசிய இனம் என்றோ பொய்யான சில தேசியஇனங்களை உருவாக்கிச் செப்பிடி வேடிக்கை காட்டி வருகிறது. இத்தகைய ஆண்டைத்தேசியஇனத்தின் இனஒடுக்கலை எதிர்த்து, ஒடுக்குண்ட தேசிய இனங்கள் போராடத் துணிகின்றன. இவ்வாறு தேசியஇனச் சிக்கல் தலையெடுத்து, அப் பன்னாட்டின அரசை அலைக்கழிக்கத் தொடங்குகின்றது.

இத்தகைவரலாற்று வளர்ச்சியை முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் மூடிமறைக்கப் பார்க்கிற இந்தி(ய) வல்லரசு, தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வேண்டுமென்றே பெரும்பான்மையருக்கும் சிறுபான்மையருக்கும் இடையிலான போராட்டம் என்றோ, புத்த மதத்தவருக்கும் 'இந்து' மதத்தவருக்கும் இடையிலான பூசலென்றோ, ஒரே நாட்டைச் சேர்ந்த வெவ்வேறு உடலினங்களுக்கு (Ethnic races) இடையிலான சண்டையென்றோ திரித்துச் சொல்லுகிறது. சிங்களவர்களின் ஆண்டைகளுக்கும் ஒட்டுமொத்தமாகத் தமிழீழத் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஒரு தேசியஇன முரண்பாடு என்பதை மூடி மறைக்கப் பார்க்கின்றது.

இத்தகைய மூடிமறைத்தலின் தேவையைக் கருதி, தமிழீழ விடுதலையை உறவாடிக் கெடுப்பதென்னும் கயமை நிலையே இந்தி(ய) வல்லரசினுடைய சூழ்ச்சியாக இருக்கிறது. அதனால்தான் சடுத்தப்பட்டுச் சிங்கள இனவெறிக் கொடுங்கோலருடன் கரந்து உறவாடி வருகிறது. தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுச் சிங்களரின் நலன்களுக்கு அடிபணிந்து நடக்கச் சொல்லித் தமிழீழப் புரட்சியருக்கு ஒரு பெரிய அழுத்தத்தைக் கொடுத்து வருகிறது. திம்புவில் பேச்சரங்கு அமைத்துக் கொடுத்து நட்பு நாடகம் ஆடிவருகிறது. இந்தச் சூழ்ச்சிக்கு இரையாக மறுத்துத் தமிழீழ விடுதலைக் கொள்கையில் உறுதியாக நிற்கின்ற தமிழீழத் தலைவர்களை மிரட்டத் தொடங்கியுள்ளது. அவர்களை மேலும் பிரித்துக் கெடுக்கவும், அவர்களில் சிலரை விலைக்கு வாங்கவும் முயல்கிறது.

— கருநாடகத் தமிழர் முன்னணி, பெங்களூர்.

தமிழினத்தை ஒடுக்கவே தமிழீழத்தை மறுக்கிறது இந்தியா!

இளங் குருளைகளே! தமிழீழத்தை வென்றெடுங்கள்!

உலகம் வாழ் தமிழர்க்கே ஒளியெனத் தோன்றிய ஒப்பற்ற இளங் குருளைகளே! ஈகம் செய்வதற்கென்றே தோன்றிய இளம் புலிகளே! அன்றுடம் எம் அடிமைத் தளையை அறுத்திட உம் உடல், பொருள், இன்பம் யாவற்றையும் இரையாக்கும் இள அரிமாக்களே! உங்களால்தாம் தமிழரின் அடிமைத் தளை தகர்க்கப் படும்.

அந்தோ! உங்கட்கும் இங்குள்ள இளைஞர்கட்கும் எத்தனை இடைவெளிகள். பிறக்கும்போதே துமுக்கியுடன் தோன்றுகின்றீர்கள். தாயின் கருவில் தோன்றும்போதே, மறவுணர்ச்சியும் குருதியில் கலந்துவிடுகின்றது. தாயின் உடலை விட்டு வெளியேறுங்கால் கண்முன்னே நடக்கும் கொடுமைகளைக் கண்டு உள்ளம் மரத்து விடுகின்றது. பிறந்தபோது உங்கள் சாவும் உறுதி செய்யப்படுகின்றது. உங்கள் கண்ணெதிரே உங்கள் தாய், தங்கை, தமக்கை, உறவுகள், சிங்கள வெறி நாய்களால் வேட்டையாடப்படுவதைக் கண்டு கண்டு உள்ளம் கொதிக்கின்றீர்கள். உடலில் உள்ள நரம்புகள் எல்லாம் புடைக்கின்றன. உங்களையும் அறியாமல் உங்கள் கை வேட்டுக்குழலை நாடுகிறது. படித்துப் பயனடைய வேண்டிய நீங்கள், காடுகளிலும் மலைகளிலும் அலைகின்றீர்கள். பொத்தகம் சுமக்கவேண்டிய கைகள் துமுக்கிகளையும், குண்டுகளையும் சுமக்கின்றன, ஆய்வு செய்ய வேண்டிய உள்ளம் அடிமைத்தளை அறுக்க ஆய்வு செய்கின்றது. பஞ்சணையில் படுத்துறங்கும் உடலம், பாழ் வெளிகளில் படுக்கின்றது. எதற்காக? அடிமைத் தளையை அறுத்து எறிவதற்காக. உங்கள் உடல் அணுக்கள் ஒவ்வொன்றும் தமிழீழம்-தமிழீழம் என்று குரல் கொடுக்கின்றது.

இங்கே என்ன!

பிறக்கும்போதே பெண்ணிடம் உள்ள உறுப்புகள் எத்தனை? அவற்றால் எப்படியெப்படி இன்பம் பெறலாம் என்றல்லவோ பிறக்கின்றன. படிக்கும்போதே எத்தனைத் திரைப்படம் பார்க்கலாம் என்றல்லவோ திரிகின்றன. கட்டுரை எழுதி ஆய்வு செய்யவேண்டியவை, கழிசடை இதழ்களை அன்றோ கல்வி நிலையங்களில் ஆய்வு செய்கின்றன. அடிமைத் தளையை அறுக்கவேண்டித் தினவெடுக்கும் தோள்கள் வெற்று, ஆரவாரங்கட்கும் - சாதி சமயப் பூசல்கட்குமன்றோ தினவெடுக்கின்றன. தமிழ் இன, நாட்டு விடுதலைக்குப் பாடாற்ற வேண்டிய கைகள், பாழும் அரசியல் சண்டைக்கும், அவர்களின் தந்நல வேட்கைக்குமன்றோ பாடாற்றுகின்றன.

ஓ! தமிழீழ இளைஞர்களே! உங்கட்கு உதவ வேண்டிய இந்த இளைஞர்கள், இப்படி உருப்படாமல் அலைகின்றார்களே என்று எண்ணும்போது... நெஞ்சம் வெடிக்கின்றது! உடலம் புண்ணாகின்றது! இவர்கள் திருந்துவார்களா?

உங்கள் விடுதலையை உங்களால் அன்றி யாரேனும் பெற்றுத் தரமுடியாது. உங்களால்தாம் முடிவு செய்யப்பெறுதல் வேண்டும். உங்கள் ஆற்றலை யாரும் அழித்துவிட முடியாது. இல்லையெனில், இதுகாறும் நீங்கள் சிந்திய அரத்தம் பயனற்றதாகி விடும். உங்கள் ஆற்றல் அளப்பரியது உங்கள் வழியே நீங்கள் செல்லுங்கள். வெற்றி இன்றில்லையாயினும், நாளை கட்டாயம் உண்டு.

—மெய். அருண்மொழியன்.

பாரத 'மாதாக்களே'!

இவ்வாண்டில் ஆகத்து மாத இடையில் ஆப்பிரிக்க நாடான நைரோபியில் நடந்த உலகப் பெண்கள் மாநாட்டில், இந்தியாவில் உள்ள விலைமகளிர் கணக்கு ஒன்று கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி,

பம்பாயில்	1 இலக்கம் பெண்களும்	(பம்பாயில்
தில்லியில்	40 ஆயிரம் பெண்களும்	மொத்தப்
கல்கத்தாவில்	1 இலக்கம் பெண்களும்	பெண்கள்
புனே நகரில்	1 இலக்கம் பெண்களும்	50 இலக்கம்
நாக்பூரில்	13 ஆயிரம் பெண்களும்	பேர்)

விலை மாதர்களாக உள்ளனர். அரசுக் கணக்கில் வந்த தொகை இது. கணக்கில் வராத பெண்கள் எத்தனை பேரோ?

மேற் குறிப்பிட்ட பெண்களில் 25 விழுக்காடு கடத்தி வரப்பட்டவர்கள், ஏழ்மையால் விற்கப்பட்டவர், திருமணப் பரிசப் பணத்திற்காகக் கைவிடப் பெற்றவர்கள் ஆவார்கள்.

இதைவிடக் கொடுமையான செய்தி ஒன்று உண்டு. 12 அகவைக்கும், 18 அகவைக்கும் இடையில் உள்ள சிறு பெண்கள் பல இலக்கம் பேர் இப் பரத்தமைத் தொழிலில் உலகம் முழுவதும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்பதுதான். இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் பலர் படிப்பறிவில்லாதவர்களாம்.

— நன்றி: 'அந்தமான் முரசு', 24-8-85.

உ.த.மு.க. உறவு மடல்,

ஒப்புக்கு நடத்தும் ஒரு..!

தோழமை நெஞ்சங்களே,

நேற்றுடன் பஞ்சாபில் தேர்தல் விளக்க இயக்கம் துவக்கு முனையில் நடந்து முடிந்திருக்கிறது. இன்று போய் நாளை 'ஒப்போலை' போட்டுத் தீரவேண்டும்! மக்கள் நாயக வதை 'நாளை' ஒருநாள் மட்டும் நடந்து முடிகின்ற நாடகம் அன்றே?

இன்று தமிழ்நாட்டில் 'அடைப்பு' கடை மூடிக் கிடக்கும்-போக்குவரத்து முடக்கப்படும். வெற்றிகமாக தமிழக அரசின் அமைச்சர்களுடன் 'பெரிய தலைவர்கள் எல்லாம்' உண்ணா நோன்பிருந்து 'உடன் கட்டை' ஏறுவார்கள்...! அவர்களின் 'ஈழ விடுதலை' ஆசையை விட, அமைச்சர்களின் ஆளுங்கட்சியின் 'அருள் பார்வை' மீதுதான் கொள்ளையாசை என்பது சொல்லாமலே விளங்கக் கூடியதாகும்!

மதுரை மாநகரில்...இந்த 'நோன்பு' நாடகம் நடந்து கொண்டிருக்கிற நேரம். மதுரையின் அருகேயுள்ள விரகனூர் அணைக்கட்டை நோக்கி மிதி வண்டிகள் சாரி சாரியாகச் செல்கின்றன. அங்கே மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மிதி வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. ஐயாயிரம் இளைஞர் இந்த (அணை-இல்லை) 'தலை மதகு' நோக்கித் திரண்டு வந்ததேன்? இவர்களுக்கு 'ஈழ விடுதலை' மேல் நம்பிக்கை இல்லையா?

கடை கண்ணிகளை மூடிவிட்டு, வேலை அலுப்புத் தீரக் கிடைத்த இந்த நாளை இவர்கள் 'வைகை மதகு' அணை நோக்கி வந்து கழிக்க ஆர்வம் கொண்டதேன்?

மதுரை மாநகரின் திரைப்பட அரங்குகள் எல்லாம் பகல் காட்சிகளை நிறுத்தி விட்டதானா?

மதுரையில் மட்டுமா? இப்படி ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் 'ஒதுங்கி' ஓடுகிறார்கள்?

'பாரதத்தில்' பஞ்சாப் பற்றி எரியும் போது, 'ஈழ விடுதலைக்காக'ப் பட்டினி கிடப்பதைக் கண்டு, 'இவர்கள் போலிகள்', என்று இந்த இளைஞர்கள் முடிவெடுத்து விட்டார்களா என்ன?

'அமைதியைக் காப்போம், இலங்கையை மீட்போம்' என்ற ஒட்டாத முழக்கத்தை உணர்ச்சியின்றி எழுப்பிய இளைஞர் இருவரைக் கண்டேன்!

இதே வேளையில் 'இந்திய சோவியத்து நட்புறவுக் கழகம், அமைதி ஒருமைப்பாட்டியக்கம் என்ற பெயரில் 'அமைதி, அமைதி' என்று நாட்டைச் சுற்றி வருவதையும் கண்டேன்! இவர்கள் இந்த 'அமைதி'யை எவரிடம் எதிர்பார்க்கின்றார்கள்? கொள்ளை வணிகரும், சுரண்டல் பேர்வழிகளும் 'குடியேறிவிட்ட' இந்த அமைதிக் கோவிலில் எந்த 'ஒளி' விளக்குத்தான் சுடர்விட முடியும்?

'அமெரிக்க' எதிர்ப்பு, என்பது 'நெருப்பாய்' இருக்கும் மக்களிடம் 'அமைதி' 'அமைதி' என்று 'ஊதி' விடுவதால் வலுப்பெற்றுவிடாது. போராட்டப் புயலொன்றே அந்த நெருப்பை அள்ளிச் சென்று வல்லரசாண்மையைப் பொசுக்க முடியும்!

ஈழவிடுதலை ஆதரவு இயக்கம் நடத்துபவர், கிளர்ச்சியூட்டும் செயல் பேச்சுகளைக் கைவிட்டுப் 'பட்டினி கிடந்து அமைதி' காப்போம் என்பது, அழிபடும் தமிழனுக்கு ஆதரவு தந்ததாகுமா?

எதிரி தாக்கும்போது, நண்பனை மல்லுக்கட்டாகக் கட்டிப் பிடித்துத் தடுப்பது, எதிரியின் கை ஓங்குவதற்கே வழி வகுக்கும்'

தமிழனிடம் உள்ள விடுதலைச் சிறுகனலையும் 'ஊதி' அணைத்துவிட முயல்கின்றார்கள். இந்தக் கனவின் மூல நெருப்பாகவுள்ள பாட்டாளித் தமிழன் விழிப்புற்று வரும் நேரம்... அவனைப் 'பண்பாட்டுச் சிதை'யிலிருந்து தடுத்து, 'எதிரியை இனம் காட்டி' அணிதிரட்டி விட்டால் தமிழின விடுதலைக்குத் தடையில்லை.

நாட்டுப்புறத்தில் 'புடைகுண்டு பாழாகுதல்' என்று கூறுவார்கள். 'தோளிலிருந்து செவியைக் கடிப்பது' என்பார்கள். அப்படித் தமிழ்மக்களைக் காக்க வந்தவர்கள் என்று கூறிக்கொண்டே, தமிழர்களை முன்னேறவிடாமல் தடுத்து வருகின்றார்கள்! இவர்களிடம் நாம் எச்சரிக்கையாக இருப்போம்!

துரும்புகள் மிதக்கலாம் மீன் குஞ்சுகள் அடி ஆழத்தில் எதிர்நீச்சலடிக்கின்றன! ஆம் இன்று 'பொய்க்கோலம் பூணக் கற்ற வல்லவர்கள்' அதிகார வலிமை கொண்டு விளம்பர வெளிச்சத்தில் மிதக்கின்றார்கள்.

விடுதலைப் போராளிகள், மெய்யன்பர்கள், 'மீன் குஞ்சுகளாக அடிஆழத்தில் நீந்தி வருகின்றனர். இவை சுறுமீன் குஞ்சுகள்.

போலிகள் மக்கள் வெள்ளத்தில் மிதக்கலாம்... பெரிய பகட்டுக் கலங்களில் வலம் வரலாம்... சுறு மீன்களின் சுழல் வீச்சில் அக் கலங்களும் நொறுங்கும் மிதப்பவர்கள் காலவெள்ளத்தோடு ஓடிக் கரைவார்கள்! அடிமட்டத்தில் கிடந்து போராடும் தமிழ்ப் பாட்டாளியே...

உலகப் பாட்டாளிகள்
உனக்குத் தோள் கொடுப்பார்கள்!
உன் வெற்றியில் நீ
இழப்பது அடிமைத்தனமே!

— பறம்பை அறிவன்.

உங்கள் மடல்கள்

1. உடல் நலம் பேணிக்கொள்ளுங்கள்!

என்று தமிழ்நிலம் விடுதலை எய்தும்?
என்று தமிழ்மாந்தர் இன்புற்று வாழ்வர்?
என்று தமிழின ஒற்றுமை ஓங்கும்?
என்று தமிழரின் அடிமைகள் வீழும்?
என்று தமிழர்தம் மடமைகள் மாளும்?
என்று தமிழரின் பொருளியல் உயரும்!
என்று தமிழன் உணர்வுற்று எழுவான்?
அன்றே! தமிழர்க்கு விடுதலை யாமே!

அன்பு கனிந்த ஐயா! வணக்கம்!

நம் உ.த.மு.க. கரூர் கிளை தொடக்க விழா சிறப்புடன் நடைபெற்றதும், அதில் தங்களின் பல்வேறு நிகழ்ச்சிகளில் வெவ்வேறு வகையான உண்மைக் கருத்துகள் முற்காலத் தற்கால நிலையை உணர்த்தும் வகையில் அமைந்து ஒவ்வொரு மாந்தன் நினைவிலும் நிலைத்து நிற்கக்கூடிய தெளிந்த கருத்துக்களைக் கேட்ட என் நெஞ்சில் மீண்டும் புத்துணர்வு தோன்றியது.

ஆசிரியப் பெருமக்களும், புலவர் பெருமக்களும் நிறைந்துள்ள தமிழ் நாட்டில், குறிப்பாகக் கரூரில் தங்களின் உண்மை விளக்கங்களைக் கேட்க குறைந்த அன்பர்களே வந்திருந்தது, எனக்கு மிகவும், வருத்தத்தையே தந்தது. இந்த வருத்தம் ஒவ்வோர் உ.த.மு.க. உண்மைக் கொள்கை மிக்க தொண்டனுக்கும் இருக்குமென்பதில் வியப்பில்லை.

இன்று நம் நாட்டில் திரைப்படத்தையும், அதைச் சார்ந்த பாக்கியராசு, இராசேந்தர், சிலுக்கு, அனுராதா படங்களையும் அரை அம்மண நடனத்தையும் காணத் துடிக்கும் கூட்டத்திற்கு அளவில்லை.

ஓர் உண்மைப் பாவலரின், ஒப்பில்லாச் செய்திகளை, இன்று நாட்டில் நடக்கும் பொய்ம்மையையும், புரட்டையும், சூதையும், வஞ்சகத்தையும் சுட்டு எரிக்கும் கருத்துகளைக் கேட்டிடத்தான் கூட்டம் இல்லை.

"தமிழா! உணர்வு கொள், தன்மான உணர்வு கொள்! தமிழா! விழிப்புடன் இரு! உன் பகைவன் உன்னிலும் ஆற்றல் அதிகம் கொண்டவன்! உன்னை விரைவில் வென்று விடுவான்! விழிப்புறு, தமிழா! விழிப்புறு!" என்று இன, மொழி, குமுகாய நலம் கருதித் தனக்கென ஒருபோதும் எதனையும் விரும்பாது, கடந்த நாற்பது ஆண்டுக் காலமாகத் தமிழினத்திற்காகப் பாடுபடும், பாடுபட்டு வரும் தங்களை மதிக்காமல் வசை பாடும் கேடர்களை எண்ணும் போது என்னென்று சொல்வது?

நாளொரு சாதியும், பொழுதொரு மதமும், அதனைச்சார்ந்த பல்வேறு கிளைகளும் பல்கிப் பெருகும் போது, நம் உ.த.மு.க. கிளை ஊர்தோறும், விரைவில் தோற்றுவிக்க வேண்டும், மிகுவேகமாகச் செயலாக்க வேண்டும்.

இன்று புத்தாநத்தம், மண்டைக்காடு போன்ற இடங்களில் மத வெறிகள் புற்றீசல் போலத் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இது குமுகாயக் கேடர்களாலேயே நடக்கிறது. கொலையும், கொள்ளையுமே மலிந்துவிட்டன. பட்டினியால் வாழும் ஏழை ஒருபுறமாகவும், பஞ்சு விரிப்பில் படுத்துறங்கும் பண முதலைகள் ஒருபுறமாகவும், இன்று நாட்டைத் தன்வயப் படுத்திக்கொள்ள, அதிகார முனைப்பில் ஆட்கொள்வார் மற்றொரு புறமாகவும் இருந்துகொண்டு, தொட்டிலையும் ஆட்டிக்கொண்டு, பிள்ளையையும் கிள்ளிவிட்டுக் கொண்டிருக்கும் எத்தர்கள் பெருகிக் கொண்டே இருக்கிற நேரத்தில் நாம், நம் தமிழினத்தைத் திசை மாற்றும் வடக்கு ஆளுமையாளருக்கும், தக்க பாடம் புகட்டிடவேண்டும். இல்லையேல், பின் சில ஆண்டுகளில் 'தமிழ்' என்றொரு மொழியும் இராது; தமிழினமும் இராது என்பது உறுதி.

ஆகவே, ஐயா! அவர்கள் அருள் கூர்ந்து எந்த ஓர் இன்னல் ஏற்படினும், எப்படியேனும் தமிழையும், தமிழ் இனத்தையும் மேம்பாடுறச் செய்ய வேண்டுமென்றும். இது தங்களாலேயே இயலும் என்றும், வெற்றி நமக்குத்தான் கிட்டும் என்றும் கூறித் தங்களின் தாளபணிந்து வணங்குகின்றேன்.

ஐயாவுக்கு ஓர் அன்புக் கட்டளை. குறித்த காலத்தில் உணவு கொண்டு, உண்டு, உடல் நலம் பேணவேண்டும். "உண்டி சுருங்கின் உயிர் சுருங்கும் என்பர். நீங்கள் நலமுடன் இருந்தால்தான் மொழியும், நாடும், இனமும் காக்கப்பெறும். ஆகவே உடல் நலம் பேணவும், அன்பின் மிகையால் மடல்

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

இளைஞர்கள் குமுக நலம் பேணவேண்டும்!

இளைஞர் ஆண்டில் இளைஞர் நிலைகள் !

அமெரிக்க நாகரிகம் போகிற போக்கு! அடிபட்டுச் சாகின்றனர் பெற்றோர்!

தகப்பனார் ஒரு நெஞ்சு நோயாளி! அவரது வீட்டில் அவரின் 19 அகவையுள்ள மகன் மாறினா ஒலிப்பானை [இசைத்தட்டு வானொலி] மிகத் துல்லியமாக வைத்துக் கேட்டுக்கொண்டிருந்தான். ஒலியைக் கொஞ்சம் குறைக்குமாறு தகப்பனார் கூறினார். உடனே, அவருடைய மகன், தன்னைப்பெற்ற 'கிழட்டுப் பயலி'ன் மீது வசைமாரி பொழிந்ததோடு, ஒரு தடியை எடுத்து, அறையிலிருந்த பண்டங்களை யெல்லாம் உடைக்கத் தொடங்கினான்.

மற்றொரு 17 அகவை இளைஞன், தன் அன்னையை அடிக்கடி உதைப்பதுண்டு. ஒருநாள் நள்ளிரவு வரை அவன் வீடு திரும்பவில்லை. அன்னையோ கவலையோடு காத்திருந்தாள். கஞ்சா அடித்துவிட்டு இரவு ஒரு மணிக்கு வீடு வந்த அவனை 'ஏன் தாழ்த்தம்' என்று தாயார் கேட்டாள். உடனே அவன் தன் கைத்துமுக்கியை எடுத்து, ஒரு சொல் பேசினாலும், சுட்டுத் தள்ளிவிடுவதாக அச்சுறுத்தினான். அந்தத் தாயோ வெருண்டு போய், பக்கத்து வீட்டிற்கு ஓடிப்போய் ஒண்டிக்கொண்டாள்.

இத்தகைய நிகழ்ச்சிகள் அமெரிக்கக் குடும்பங்களில் பொதுவாக இயல்பாகிவிட்டன. குடி, போதை மருந்துகள், அரம்ப [ரௌடி]த்தனம் போன்ற பல கேடுகள் அமெரிக்க இளைஞர் குமுகாயத்தைப் பிடித்திருப்பதுடன், இப்போது புதிதாகப் பெற்றோரைத்தாக்கும் சிக்கலும் தலைதூக்கியுள்ளது. குடும்ப வாழ்வின் அடித்தளத்தையே அது தகர்க்கும் ஏதத்தினை ஏற்படுத்தியுள்ளதாக, அமெரிக்க அறிஞர்கள் கூறுகின்றனர். இது குறித்து அவாய் பல்கலைக்கழக உளவியல் பேராசிரியரான பர். டேனிலோ போன்சு பெரும் கவலை தெரிவித்துள்ளார்.

வாலையர்கள் செய்யும் பற்பல குற்றங்களையும், பெற்றோர்கள் காவல்துறைக்குத் தெரிவிப்பதில்லை. எனினும் ஏறக்குறைய 80 இலக்கம் பெற்றோர்கள், தங்கள் மக்கட் பேறுகளால் அல்லல்படுகின்றனர் என்று புள்ளி விளத்தங்கள் கூறுகின்றன. தங்கள் புதல்வர்களின் சில நயன்மையற்ற கோரிக்கைகளைப் பெற்றோர்கள் நிறைவேற்றுததால் 40 இலக்கம் பெற்றோர்கள் அடி உதைக்கு ஆளாகியுள்ளனர்.

வாலையர் கொடுமை ('வாலிப பயங்கரம்') எந்த அளவுக்குச் சென்றுள்ளது என்பதையும், அந்த விளத்தங்கள் தெரிவிக்கின்றன. மொத்தத்தில் 10 விழுக்காட்டுப் பெற்றோர்கள், சென்ற ஓராண்டில் ஏதேனும் ஒரு முறையேனும், தங்களின் 15-17 அகவைப் புதல்வர்களால் அடிபட்டுள்ளதாக ஒப்புக்கொண்டனர், 1983 இல் கொலைபுண்டவர்களில் 2 விழுக்காட்டினர் தங்களின் சொந்தக் குழந்தைகளாலேயே கொல்லப்பட்ட தகப்பனார்களும், தாய்மார்களும் ஆவர். வாலை (வாலிப) அகவையினரில் 20 விழுக்காட்டுப் பேர் உளவியல் முறையாக வன்முறையாளர்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் தங்கள் வீடுகளை ஓர் அளறு (நரகம்) ஆகவோ அல்லது ஒருவகைச் சிறைச்சாலையாகவோ மாற்றியுள்ளனர். '80 இலக்கம் தாய்தந்தையர் தங்களின் குழந்தைகளாலேயே உருச்சிதைவு (சித்திரவதை) செய்யப்பட்டு வருவதாக' கான்சாசு மருத்துவக் கல்லூரி உளவியல் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

அண்மை ஆண்டுகளில் வெறி (போதை) மருந்துப் பழக்கம் அதிகமாகியுள்ளதே அதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும்போது இளைஞர்களது எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. எனவே அவர்கள் வெறியப் பொருள்களை நாடுகின்றனர். இதர நாடுகளுக்கு முன்மாதிரியாக 'அமெரிக்க உரிமைக் குமுகம்' திகழ்வதாக அதன் ஆட்சியாளர்கள் தம்பட்டமடித்துக் கொண்டிருக்கும் போது, நடைமுறையில் அஃது ஒரு நோய்வாய்ப்பட்ட கொடிய குமுகமாக உருவெடுத்து வந்துள்ளது.

எல்லா வகையான வெறியப் பொருள்களும் இளைஞர்களுக்கு எளிதில் கிடைப்பதாக நியூசெர்சியைச் சேர்ந்த உளவியல் பேராசிரியர் ரிச்சர்டு ஃபோர்மிகா கூறுகிறார்.

இப்போது, அமெரிக்க இளைஞர்களில் மூவரில் ஒருவர் தடை செய்யப்பட்ட வெறிய மருந்துகளுக்கு அடிமையானவர்கள். பள்ளி மாணவர்களில் 16 பேர்களில் ஒருவர் நாள்தோறும் கஞ்சா அடிப்பவர்கள். ஏறக்குறைய 25 விழுக்காட்டுப் பள்ளி மாணவர்கள் குடிக்கு அடிமையானவர்கள் என்று புள்ளி விளத்தங்கள் கூறுகின்றன.

இத்தகைய வாழ்க்கை முறையைத்தான் அமெரிக்கா உலக நாடுகளின்மீது வல்லடியாகத் திணிக்க முயல்கின்றது. 0

தமிழின விடுதலை மறவர் தோழர் வேலு மறைவு!

தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மா. இலெ.) உறுப்பினரும், வடவார்க்காடு மாவட்ட முற்போக்கு உழவர்கள் சழகத் தலைவரும், தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணிச் செயற்குழு உறுப்பினரும் ஆகிய தோழர் வேலு அவர்கள், வ. ஆ. மாவட்டம் அத்தியூரில், கடந்த ?-8-85 ஆம் நாளன்று, தீயவர் சிலரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட செய்தியறிந்து மிகவும் வருந்துகிறோம்.

தோழர் வேலு அவர்கள் 1945 ஆம் ஆண்டு, மலேசியாவில் பிறந்தார். அவருடைய தந்தை சின்னப்பையன், மலேசியப் பொதுவுடைமைக் கட்சியில் பங்காற்றி அரசின் அடக்குமுறைக்கு ஆட்பட்டு மாய்ந்துபோனவர். வேலு அவர்கள் தமது 5 ஆம் அகவையில் தம் தாயாருடன் தமிழ்நாடு வந்து, வடவார்க்காடு மாவட்டம் கள்ளியூரில் வாழ்ந்து, அத்தியூர் செயாவைத் திருமணம் செய்துகொண்டு, இலைச்சுருட்டு (பீடி)த் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டே, பொதுத் தொண்டிலும், தமிழ்நாட்டு விடுதலை இயக்கங்களிலும் பங்கு கொண்டு உழைத்தார்.

தமிழ்நாட்டுத் தீவிரப் பொதுவுடைமையாளர் சீராளன், சிவலிங்கம் ஆகியோர்க்குப் பாதுகாப்பு அளித்த குற்றத்திற்காகத் தோழர் வேலுவும், அவர் துணைவி செயாவும் காவலர்களால் பெரிதும் கொடுமைப்படுத்தப்பட்டாலும், இவர்கள் மிகக் கடுமையாக அரசின் வன்முறையையும், கொடுமைகளையும் எதிர்த்துப் பல போராட்டங்களில் துணிவுடன் பங்கு கொண்டனர்.

மூன்று சிறிய ஆண் குழந்தைகளுக்குத் தந்தையான வேலு அவர்கள் அரசு அதிகாரக் கூட்டத்தால் படுகொலை செய்யப்பட்டதையும், அதற்கான நடவடிக்கை இதுவரை எதுவும் எடுக்கப்படாததையும் மிகுவாகக் கண்டிப்பதுடன், கணவனை இழந்து தவிக்கும் வீராங்கனை தோழியர் செயாவுக்கும், அவர் குடும்பத்தார்க்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். —அமைச்சர் 'தமிழ்நிலம்'

உங்கள் மடல்கள்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டுவிட்டது. உள்ளத்தில் பொங்கும் உணர்வின் விசையே இதன் கரணியமாகும். பிழை இருப்பின் மன்னித்துக் கொள்ள வேண்டுமாய்ப் பணிவன்புடன் மீண்டும் தாள் பணிந்து வணங்கும் அன்பன்,

தென்மொழித் தொண்டன்,
—பாவலர். தாழை. ந. இளவழகன், மணப்பாறை.

தமிழக அரசின் போலித்தனமான – ஏமாற்றுத்தனமான நடவடிக்கைகள் !

1983-இல் தமிழீழ ஏதிலிகளுக்காகத் தமிழக அரசு திரட்டிய பொருள் எங்கே?

தமிழக அரசு தமிழீழ ஏதிலிகளுக்காக, ஒரு கோடி உருபா திரட்டப் போவதாக, அண்மையில் அது கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்ட முடிவில் அறிவித்தது, மூன்றுகோடி உருவா அளவுதிரட்டியது, எல்லாரும் அறிந்ததே!

1983-ஆம் ஆண்டு அஃது இதேபோல் ஏதிலிகளாக வந்த இலங்கைத் தமிழர்களுக்காகப் பொருள் திரட்டுவதாக ஓர் அறிவிப்புச் செய்து, பொதுமக்களிடமிருந்து பலகோடி உருபாக்களைத் திரட்டியது. எவ்வளவு பொருள் திரண்டது என்று அதில் குழு உறுப்பினர்களாக இருந்த நெடுமாறன் போன்றவர்களுக்கும் தெரியாது. பொதுமக்களுக்கும் தெரியாது.

ஏன் என்றால் அன்று அரசு அமைத்த குழுவை கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஒருதடவைகூட மீண்டும் கூட்டவே இல்லை.

இந்த அழகில், அவலத்தில், எரிகிற வீட்டில் பிடுங்கியது ஊதியமென்று, மீண்டும் ஒரு கோடி உருபா பொருள் திரட்டுவதாக அறிவித்து, மூன்று கோடி உருவா வேறு திரட்டி விழுங்கிவிட்டது.

ஏற்கனவே திரட்டிய பலகோடி உருபா என்ன ஆனது என்றே திரட்டியவர்களைத் தவிர வேறு எவருக்குமே தெரியாத நிலையில், மீண்டும் பொருள் திரட்டிக் கொடுத்துக்கொண்டிருப்பது கொடுமையானது; ஐயமானது; கொள்ளையடிப்புக்கு வழி வகுக்கக் கூடியது.

பொதுமக்களிடம் அரசே இப்படிபட்ட கொள்ளையடிப்புகளில் ஈடுபட்டால், நாம் யாரிடம் போய் முறையிடுவது ? எச்சரிக்கையாக இருங்கள் !

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. (குறள் : 552)

இதன் பொருள் : (தனிவழியில் வேல் வைத்துக் கொண்டு நின்ற வழிப்பறி கொள்ளையன், அங்குப் போவார் வருவார்களிடம் 'உங்களிடம் உள்ள கைப்பொருளை எடுத்துத் தாருங்கள்' என்று மிரட்டிக் கேட்பது போல் ஆகும், தீயவை செய்பவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டிய அரசன், குடிமக்களிடம் பொருள் திரட்டுவது)

'அண்ணா !'

'என்ன தம்பி ?'

ஆங்கில ஏடு ஒன்றில் நான் படித்த குட்டிக் கதை ஒன்று சொல்லட்டுமா ?'

'சொல் தம்பி !'

'ஓர் அரசன் ஒரு கனவு கண்டானாம்; அந்தக் கனவில் அவன் மூன்று எலிகளைக் கண்டானாம் ! அவற்றில் ஒன்று மிகவும் கொழுத்து இருந்ததாம். இன்னொன்று மிகவும் இளைத்து மெலிந்து கிடந்ததாம்; மூன்றாவதோ கண்தெரியாத குருடாக இருந்ததாம். அந்தக் கனவின் கருத்தை அறிய அவன் ஓர் அறிஞரை வரவழைத்துக் கேட்டானாம். அந்த அறிஞர் சொன்னாராம்— 'கொழுத்த எலி உன் அமைச்சர்களைக் குறிக்கும்; மெலிந்த எலி உன் நாட்டு மக்களைக் குறிக்கும். குருட்டு எலி உன்னையே குறிக்கும்' என்றாராம்.

'நல்ல கதைதான்... !'

'அந்தக் கனவை இன்றைய ஆளும் கட்சித் தொண்டர் கண்டதாக வைத்துக் கொண்டால்...'

'வைத்துக் கொண்டால்... ?'

'கொழுத்த எலி ஆளும் அமைச்சர்களையும், மெலிந்த எலி நாட்டு மக்களையும், குருட்டு எலி ஆளும் கட்சித் தொண்டர்களையும் குறிப்பதாகச் சொல்லலாம் அல்லவா ?'

'எனக்குத் தெரியாது தம்பி !'

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 65] பதிவு எண் TN/MS (C)/657

த.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

- தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

அனுப்புதல்: தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர். திரு/திருவாட்டி

தால்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 56-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர் : தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.